[1974 மார்ச் 9

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இதற்கு எவ்வளவு செலவாகும் என்ற குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. ஆனால் திருக்கோயில் பணிகளுக்கு அந்தந்த கோயில் நிதியிலிருந்துதான் செலவு செய்யவேண்டுமென்று இருப்பதால் திருக்கழுக்குன்றம் கோயிலில் இதற்குப் போதுமான நிதிவசதி இல்லாததால் சுற்றுலா வளர்ச்சி வாரியத்திடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள்தான் இந்த யோசனையை சொன்னது. அவர்களிடமே இந்தப் பணியை ஒப்படைக்கலாமா என்று கேட்கப்பட்டிருக்கிறது. பதில் வந்ததும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், பழனியில் இம்மாதிரியான ஒரு 'விஞ்ச்' இருக்கிறது. அதைவிட உயரமான மலையில் திருக்கழுக்குன்றம் கோயில் இருக்கிறது. அதனால் வயோதிகர்களும் மற்றவர்களும் மேலே போக மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஏற்கனவே இந்த 'விஞ்ச்' போட முடிவு செய்யப்பட்டிருந்தால், இந்த ஆண்டிலாவது அதைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மலைக் கோயில் திருக்கழுக்குன்றத்தில் மட்டுமல்ல; திருச்சி மலைக்கோயில், திருச்செங்கோட்டில் அர்த்தநாரீஸ்வரர் கோயில், சோழிங்கர்—நரசிம்மசாமி, கோவை—மருதமலை ஆகிய இடங்களிலும் 'விஞ்ச்' அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. சுற்றுலா வளர்ச்சி வாரியத்தின் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்த கேட்கப் பட்டிருக்கிறது. அவர்கள் முடிவைப்பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

Theft of idols from Perumal temple

* 350 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that a number of idols belonging to the Perumal Temple at Konthagai near Madurai have been reported stolen around the 23rd July, 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) மற்றும் (இ) ஒரு விஷ்ணு சிலையும், இரண்டு அம்மன் (தாயார்) சிலைகளும் களவு போயின. இவை மீட்கப்பட்டு, தற்போது சிவகங்கை குற்றவியல் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் உள்ளன. குற்றவாளிகள் கைது

1974 மார்ச் 9]

செய்யப்பட்டு அவர்கள்மீதான குற்ற வழக்கு மேற்படி நீதி மன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இரண்டாண்டு காலமாக அப்பன் சிலைகள் தான் திருடப்பட்டன. இப்போது அம்மை சிலைகள் திருட்டுப் போகின்றன. இவை எல்லாம் ஒரே இடத்திற்குத் தான் போகின்றனவா என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் பட்டிருக்கிறதா? ஆராய்ச்சி செய்யப்பட்டிருந்தால் அதன் விபரம் என்ன?

(பதில் இல்லை)

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, பல கோயில்களில் இம்மாதிரி பழங்காலத்து சிலைகள், புகழ்பெற்ற சிலைகள் திருட்டுப் போகின்றன. இப்படித் திருட்டுப் போவதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, சிலைகள் திருட்டுப்போவது இப்போது மட்டுமல்ல; நீண்டகாலமாக நடந்துகொண்டிருக்கிறது. அவைகள் எல்லாம் தடுக்கப்படுவதற்கு அந்தந்த கோவில்களிலே இருக்கின்ற சிலைகள் புகைப்படம் எடுக்கப்பட்டு, காவல்துறை, அறநிலையத்துறை ஆணையர் அலுவலகம், குறிப்பிட்ட கோயில்கள் ஆகிய இடங்களில் வைக்கப் பட்டு, பாதுகாக்கப்படுகின்றன. திருட்டுப் போனாலும் அந்தப் புகைப்படத்தை பார்த்து, சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். பாதுகாப்பு இல்லாத கோயில்களில் உரிய முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆங்காங்கே இரவு காவலர்கள் போட்டு, அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் எடுத்துக் கொள்ளப் படுகிறது.

(திருவாளர்கள் கோவை செழியன், முனு ஆதி, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் பாயின்ட் ஆப் ஆர்டர் என எழுந்தார்கள்.)

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]